முச்சந்தி முரளி



"அவைக்கு ஏமாத்திறதும், எங்களுக்கு ஏமாறுறதும் நல்லா பழகிப் போச்சு கண்டியளோ"

Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 99

திங்கட்கிழமை
04 மார்ச் 2024

மாசி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# இந்தியாவுக்கு இறுதி எச்சரிக்கை: இனியும் ஏமாற நாம் தயாரில்லை!

## சாந்தனின் இறுதி அஞ்சலியையொட்டி வடக்கு - கிழக்கு சிவில் அமைப்புகள் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 4

இந்தியா இதுவரை காலமும் ஏமாற்றியதைப்போல் இனியும் செயற்பட முயன்றால் இந்தியாவுடனான உறவுகள் இல்லாமல் போகும். இதனை இந்தியாவுக்கு இறுதியாக இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லி வைக்க விரும்புகின்றோம் - இவ்வாறு வடக்கு - கிழக்கு சிவில் அமைப்புகள் சாந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வையொட்டி அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11



## அம்மாவின் கையால் ஒருபிடி சாப்பாடு

### சாந்தனின் ஏக்கம் இதுதான் சட்டத்தரணி புகழேந்தி உருக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

தன்னுடைய அம்மாவின் கையால் ஒருபிடி சாப்பாட்டை சாப்பிட்டால் எல்லா வருத்தமும் மாறிவிடும் என்று சாந்தன் சொல்லிக்கொண்டிருப்பார். அதுதான் அவருடைய கடைசி ஆசையாகவும் இருந்தது. அந்த ஆசைகூட

11



## 'சின்ன அண்ணாக்குட்டி வாங்கோ: ஒருத்தரும் அழாதையுங்கோ!!'

## ஆராத்தியுடன் வீட்டுக்கு வரவேற்கப்பட்ட சாந்தன்

யாழ்ப்பாணம், மார்ச் 4

சாந்தனின் திருவுடல் நேற்று இரவு 7 மணிக்கு வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டபோது அவரது சகோதரி கற்பூர ஆராத்தி எடுத்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இதன்போது, 'ஒருத்தரும் அழக்கூடாது. சின்ன அண்ணாக்குட்டி வாங்கோ. அண்ணா வாறார் ஒருத்தரும் அழக்கூடாது' என்று அவரது சகோதரி

11

## சாந்தனின் இறுதிக்கிரியைகள் இன்று எள்ளங்குளத்தில்!!!

இந்திய - இலங்கை கூட்டுச் சதியால் சாகடிக்கப்பட்ட சாந்தன் என அழைக்கப்படும் தில்லையம்பலம் சுதேந்திரராஜாவின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் உடுப்பிட்டி, இலக்கணாவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று எள்ளங்குளம் இந்து மயானத்தில் திருவுடல்தகனம் செய்யப்படவுள்ளது. (அ-ஒ-100)

## சாந்தனின் திருவுடல் ஊர்தி: சாரதியை கைதுசெய்ய முயற்சி

வவுனியா, மார்ச் 4

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில், சாந்தனின் திருவுடல் தாங்கிய ஊர்தியை நேற்றுக்காலை மறித்த போக்குவரத்து பொலிஸார் சாரதியைக் கைதுசெய்ய முயற்சித்தமையால் அவ்விடத்தில் பரபரப்பான சூழல்

11

## சாந்தனின் திருவுடலுக்கு உணர்வெழுச்சியுடன் மக்கள் அணிதிரண்டு அஞ்சலி

யாழ்ப்பாணம், மார்ச் 4

இந்திய - இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியால் சாகடிக்கப்பட்ட சாந்தனின் திருவுடல் தமிழர் தாயகத்துக்கு நேற்று சிறப்பு ஊர்தியில் எடுத்துவரப்பட்டது. வவுனியாவிலிருந்து அவரது வீடு வரையில் வீதிகளில்

11

## கடலில் கொந்தளித்த யாழ்ப்பாண மீனவர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 4

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய மீனவர்களைக் கண்டித்தும், இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் யாழ். மாவட்ட மீனவர்கள் கடலில் கறுப்புக் கொடிப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.


நெடுந்தீவு, காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை, குருநகர், சுழிபுரம், மாதகல், வளலாய் மற்றும்

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீளும் வீதியெங்கும் சாந்தனின் நினைவில்....!




வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் உடுப்பிட்டிக்கு சாந்தனின் திருவுடல் எடுத்து வரப்பட்டபோது வழிநெடுங்கிலும் மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர்.

# காடுகள் அழிக்கப்படுவதால் உவராகும் ஆபத்தில் பூநகரி!

**கிளிநொச்சி, மார்ச் 4**

**கிளிநொச்சி, பூநகரிப் பகுதிகளில் தொடர்ச்சியாக காடுகள் அழிக்கப்பட்டு வருவதால் பூநகரிப் பிரதேசத்தின் பல கிராமங்கள் உவரடையும் ஆபத்தில் தள்ளப்பட்டுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பூநகரி, முக்கொம்பன் கிராமத்தில் சிலர் காடுகளை அழித்து காணிகளை அடாத்தாகப் பிடித்துவருகின்றனர்.

முக்கொம்பன் கமக்கார அமைப்பில் பொறுப்பிலுள்ளவர்களே காடுகளை அழிப்பதற்கு உடந்தையாக உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பூநகரிப் பிரதேசத்தில் முக்கொம்பன், கரியாலைநாகபடுவான், ஜெயபுரம் போன்ற இடங்களிலேயே காடுகள் சட்டவிரோதமாக அழிக்கப்படுகின்றன. இந்தக் காடுகளைப் பாதுகாக்கவேண்டும் என்பதே பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானமாகவுள்ளது.

அவற்றைப் பாதுகாப்பதன் மூலமே பூநகரி கிராமங்களை உவர்ப்பரம்பலிலிருந்து பாதுகாப்பதற்கு வழிவகுக்கும். எனவே இதுதொடர்பில் பூநகரி பிரதேச செயலர் கவனம் செலுத்தவேண்டும்- என்றனர். (ச-13)

# நடுநிலையாளருக்கே இம்முறை வாய்ப்பு

## டியூ. குணசேகர தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 4

இடதுசாரி மற்றும் வலதுசாரி அரசியல் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தத் தரப்பினரும் எதிர்வரும் தேர்தலில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றமுடியாது என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

அரசியலில் நடுநிலையாளர்களின் பலம் தற்போது மேலோங்கி இருக்கின்றது. அவர்களைத் தவிர எந்தத் தரப்பினரும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது. நாட்டின் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண இடதுசாரிகளிடையே ஐக்கியம் தேவை. இடதுசாரி சக்திகள் ஒன்றாக ஒன்றிணையவேண்டும் - என்றார். (எ-இ)


# ஈஸ்டர் தாக்குதல்; ரிட் மனு சமர்ப்பிப்பு

கொழும்பு, மார்ச் 4

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவரும் தற்போதைய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான நிலந்த ஜயவர்த்தனவை கைதுசெய்து குற்றவியல் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க பொலிஸ்மா அதிபர் மற்றும் சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

# ரணிலுக்கு ஆதரவு வழங்காவிடின் கட்சியிலிருந்து வெளியேறுவேன்!

## பெரமுனவினருக்கு பிரசன்ன மிரட்டல்



கொழும்பு, மார்ச் 4

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் ரணிலுக்கு ஆதரவு வழங்காமல் பலவீனமானதொரு வேட்பாளரைக் களமிறக்கினால் கட்சியில் இருந்து வெளியேறுவேன் என்று பெரமுனவின் முக்கியஸ்தரும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் அடுத்தமுறையும் ஜனாதிபதிப் பதவியில் இருப்பதற்குத் தகுதியுடையவர். பெரமுனவினர் மூன்றெழுத்து வேட்பாளர் எனக் கூறினாலும் பஸில் ராஜபக்ச போட்டியிடமாட்டார் என்பது எனக்குத் தெரியும். ரணிலை ஆதரிக்காமல் பலவீனமான வேட்பாளரை பெரமுனவினர் களமிறக்கினால் கட்சியில் இருந்து விலகுவேன். ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் அவரை ஆதரிப்பேன். இல்லையேல் அரசியல் செய்யமாட்டேன். தற்போதைய சூழ்நிலையில் நாமல் ராஜபக்ச வரக்கூடாது. இதுபற்றி அவரிடமும் கூறியுள்ளேன். ஜே.வி.பி. என்பது படுகொலை செய்யும் அமைப்பு. வீடுகள் எரிக்கும் அமைப்பு. எனவே, அந்தக் கட்சிக்கு மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என்றும் குறிப்பிட்டார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘13’ திருத்தச்சட்டம் ஜனாதிபதி ‘கப்சிப்’

## பிரதம கொறடா சுட்டிக்காட்டு



**கொழும்பு, மார்ச் 4**

**13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக தனது கொள்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது மாற்றிவிட்டார். மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார்.**

- இவ்வாறு எதிர்க்கட்சி பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே மாகாணசபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கவேண்டும் என்ற விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டில் இருந்தார். காணி, பொலிஸ் அதிகாரங்களைவழங்கும்முகமாகதேசிய காணி, பொலிஸ் ஆணைக் குழுக்களை பரிந்துரைத்த போதும் தற்போது மௌனம் காக்கிறார். அவர் தற்போது 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக தனது கொள்கையை மாற்றிவிட்டார். மாகாணசபைகளுக்குப் பொலிஸ் அதிகாரங்களை வழங்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார். முதலில் மக்கள் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் மாகாணசபைகளுக்கான செயற்பாடுகளுக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டியதே அவருடைய பொறுப்பாகும்- என்றார். (ச-இ)

### வடக்குக்கு வருகிறார்

# அநுரகுமார

கொழும்பு, மார்ச் 4

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க வடக்குக்குப் பயணம் செய்யவுள்ளார் என்று அந்தக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் எதிர்வரும் 16ஆம் திகதி கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் மக்கள் சந்திப்பில் பங்கேற்கவுள்ளதோடு, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளார். எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வரும் அநுர, பொதுமக்கள் சந்திப்பில் பங்கேற்று, தொடர்ந்து தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போடச்சட்டமில்லை

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 4

அரசமைப்புச் சட்டத்தின்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள். அதை நீடிக்கும் ஏற்பாடுகள் அரசமைப்பில் இல்லை. எக்காரணம் கொண்டும் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது என்றுதேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஏனைய தேர்தல்களை நடத்துவது சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேரடியான அதிகாரங்கள் இல்லை. பிரதேசசபைகளுக்கான தேர்தலை ஒரு வருடத்துக்கு முன்னர் நடத்தலாம். அல்லது பிரதேசசபையின் பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கலாம்.

அதேபோல் நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் எனக்கூறப்பட்டாலும் ஜனாதிபதிக்குத் தேவையானால் இரண்டரை வருடங்களில் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்தமுடியும். ஆனால், ஜனாதிபதித் தேர்தல் அப்படியல்ல. அரசமைப்புச் சட்டத்தின்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள். இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதிக்கிடையே கட்டாயம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டார். (ச-இ)

# வீடு இழந்த மைத்திரி; பொன்சேகா மகிழ்ச்சி

கொழும்பு, மார்ச் 4

உத்தியோகபூர்வ இல்லத்தை மைத்திரிபால சிறிசேன இழந்தமை நல்லது என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவர் அவர். ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பொலநறுவைக்காக மாத்திரம் செயற்பட்டார் என்றும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (எ-இ)

# மைத்திரியின் கூட்டணி அடுத்தவாரம் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 4

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான புதிய கூட்டணி அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ச-இ)

# சபாநாயகரைக் காக்கும் பொறுப்பு பிரசன்னவிடம்!

கொழும்பு, மார்ச் 4

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கான பொறுப்பு ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் எதிரணியால் முன்வைக்கப்பட்டுள்ள இந்தப் பிரேரணையை வைத்தே எதிரணிக்குப் பதிலடி கொடுக்கவேண்டும் எனவும், அரசின் பெரும்பான்மைப் பலத்தை வெளிப்படுத்துவதற்கு இதை வாய்ப்பாகப் பயன்படுத்தவேண்டும் என்றும் அரசு திட்டமிட்டுள்ளது.

அதேவேளை, நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு திரட்டும் முயற்சியில் ஐக்கிய மக்கள் சக்தியும் தீவிரமாக இறங்கியுள்ளது. (ம-44)

# புதினம் தெரியுமோ?

என்னதான் ‘மறப்போம் மன்னிப்போம்’ எண்டு வெளியில சொல்லிக்கொண்டாலும், உள்ளுக்குள்ள ‘பானிப்பூரி’ காரருக்கு எங்களில கடும் வன்மம் தான். தொப்புள்கொடி உறவுகள் எண்டு சொல்லிச் சொல்லியே காலம் காலமா எங்கட முதுகில குத்துற வேலையை மட்டும் வடிவாப் பாக்கினம். அண்டைக்கு கம்பஸ்காரர் சாந்தன்ர ‘பொடிய’ எடுக்க போகாமல் நிண்ட விசயம் பற்றி சாடைமாடையாப் பட்சி சொன்னதெல்லோ. ‘பொடி’யை எடுக்கப் போகவேண்டாம் எண்டு மட்டுமில்லை, அறிக்கையும் விடக்கூடாது எண்டு ‘பானிப்பூரிக்காரர்’ கம்பஸ்காரரிட்ட கடுமையாச் சொன்னவையாம். அதாலதான் ஒப்புக்குச் சப்பாணிக்கு ஒரு அறிக்கை விட்டவை. அந்த அறிக்கையில கம்பஸ் மாணவர் ஒன்றிய நிர்வாகக்காரர் ஒருத்தரின்ர சைனும் இல்லாமல், இறப்பர் ஸ்டாம்பும் இல்லாமல் ஏதோ மொட்டைக்கடிதம் மாதிரித்தான் கம்பஸ்காரரின்ர அறிக்கை வந்தது. முந்தியெல்லாம் துவக்கால சுட்டால்கூட துணிஞ்சு நிண்ட கம்பஸில, இப்ப பானிப்பூரிக்காரர் ‘ம்’ எண்டு அதட்டினாலே கழிசான் ஈரமாகுதாம். அந்தளவுக்குப் பயந்தடிக்கினம். அவை பயப்பிடுறதையும் குறை சொல்ல ஏலாது. எல்லாத்துக்கும் தங்களை விட்டால் ஆக்கள் இல்லை எண்டு மனக்கோட்டை கட்டுற ஆக்களே இந்தவிசயத்தில் பானிப்பூரிக்காரரின்ர காலில விழுந்து பிரதட்டை செய்யேக்க, கம்பஸ்காரர் என்ன செய்வினம்?

கம்பஸ்காரரோட பானிப்பூரிக்காரர் நிக்கேலை. அரசாங்கத்துக்கும் அழுத்தம் குடுத்து, சாந்தனுக்கு அஞ்சலி செய்யவிடாமல், ‘பொடியை’ கொண்டந்த உடனேயே எரிக்கிற மாதிரி, இழுத்தடிக்கிற வேலை பாத்தவை. ஆனால் அதுவும் ஒருகட்டத்துக்கு மேல சரிவரேலை. ஆனாலும் பானிப்பூரிக்காரர் அதோட அடங்கேலை. எல்லா அரசியல்வாதிமாருக்கும் ‘வாயைமூடிக் கொண்டு கையைக் கட்டிக்கொண்டு இருங்கோ’ எண்டு தகவல் அனுப்பியிருக்கினம் எண்டும் கதை. அதாலதான் தொட்டதுக்கெல்லாம் அறிக்கை, ஆர்ப்பாட்டம், செய்தியாளர் மாநாடு எண்டு இறங்கிற அரசியல்வாதிமார் கனபேர் சாந்தன்ர விசயத்தில கப்சிப்பா இருந்திருக்கினம். ஆனால் ‘அன்ரோய்ட்’ போனால ஆதவனை மறைக்க ஏலுமோ? இல்லைத்தானே. சனங்கள் தங்கட பாட்டில பெரிய எழுச்சியா வவுனியாவில இருந்து வடமராட்சி மட்டும் கண்ணீர் ஒழுக ஒழுக அஞ்சலி செய்ததுகள். அந்த அஞ்சலிகூட பானிப் பூரிக்காரருக்குப் பிடிக்கேலை. கிளிநொச்சியில பசுமைப் பூங்காவிலதான் சாந்தனுக்கு அஞ்சலிசெய்யிறதெண்டு முதல்ல ஏற்பாடு நடந்தது. ஆனால் பானிப்பூரிக்காரர் என்ன செய்திச்சினமோ தெரியாது, கரைச்சிப் பிரதேச சபை செயலாளர் அனுமதி தர ஏலாதெண்டு கைவிரிச்சிட்டாராம். அங்க ஏதும் முற்பதிவு இருந்தால் இல்லாட்டி நேற்று அங்க ஏதும் நிகழ்வு இருந்தால் அனுமதி குடுக்காமல் விடுறதில ஒரு நியாயம் இருக்குது. ஆனால் ஒரு காரணமும் இல்லாமல், சாந்தனுக்கு அஞ்சலிக்க ஏன் அனுமதி குடுக்கேலை எண்டு சபையின்ர செயலாளருக்குத்தான் வெளிச்சம். இத்தனைக்கும் பசுமைப்பூங்காவுக்கு 30 ஆயிரம் ரூபா கட்டவும் ஏற்பாடு செய்தவை தயாரா இருந்தவை. சபைக்கு வந்த வருமானத்தையும் விட்டு, சாந்தனுக்கு அஞ்சலி செய்யக் கூடாது எண்டதில குறியா இருந்த ஆரோதான் செயலாளருக்குப் பின்னுக்கு நிண்டு இயக்கி இருக்கினம். சிலவேளை உதுவே ராமர் சிலையைக் கொண்டந்தால் உடன அனுமதி குடுத்திருப்பினம்.

ஒரு நல்ல ஜீவனுக்கு அஞ்சலி செய்யிறதைக் கூட தடுக்கிறவை இருக்கிற நாட்டில எப்பிடி மழை இனிப் பெய்யும்?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர் இன்றி அல்லலுறும் அக்கராயன்

**கிளிநொச்சி, மார்ச் 4**

**கிளிநொச்சி, அக்கராயன் கிராம அலுவலர் பிரிவுக்கு நிரந்தர கிராம அலுவலரை நியமிப்பதற்கு கரைச்சிப் பிரதேச செயலகம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று அக்கராயன் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் 700 குடும்பங்கள் வரை உள்ளன. இங்குமக்கள்பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்டுவதற்கு நிரந்தர கிராம அலுவலர் நியமிக்கப்படவில்லை. பதில் கடமை புரியும் கிராமஅலுவலர் அக்கராயனுக்கு ஒருநாள் மட்டுமே பணிக்கு வருகிறார்.

யானைகளின் அச்சுறுத்தல், பயிரழிவுகள், கொடுப்பனவுகள் பெறல் உள்ளிட்டவற்றில் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடுகிறது. ஒரு கிராமத்தின் உயிர்நாடியாக கிராம அலுவலரே விளங்குகிறார். எனவே அக்கராயனுக்கு நிரந்தர கிராம அலுவலரை நியமிப்பதற்கு கரைச்சிப் பிரதேச செயலர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர். (ச-13)

## நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், மார்ச். 4

'ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புகள்' நூல் அறிமுக நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய இலக்கிய பேரவை முருகையன் கேட்போர் கூடத்தில் பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் இணையச் செயலாளர் பி.பிரசாந்தினி தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் 'இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் பெண்களின் நிலையும்' எனும் தொனிப்பொருளில் பொருளாதார நீதிக்கான பெண்ணியக் குழுமத்தைச் சேர்ந்த நியந்தினி கதிர்காமர், 'மாண்புறும் மாதவி' எனும் தொனிப்பொருளில் ஆசிரியரும் எழுத்தாளருமான ஸ்ரீலேகா பேரின்பகுமார் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். நூல் அறிமுகவுரையை பெண் விடுதலை சிந்தனை அமைப்பின் இணைச் செயலாளர் மோகனதர்சினி நிகழ்த்தவுள்ளார். (ச-159)

## ட்ரோன் பறக்கவிட்டவர் கைது

கிளிநொச்சி, மார்ச் 4

திருவையாறிலுள்ள இராணுவ முகாமுக்கு மேலாக அனுமதியின்றி ட்ரோன் கமராவை பறக்கவிட்டார் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சிப் பொலிஸாரால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 25 வயது இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறும்படம் தயாரிப்பதற்காகவே ட்ரோன் கமரா பறக்க விடப்பட்டது என்று இளைஞர் தெரிவித்துள்ளார். இருப்பினும் இராணுவத்தினர் கிளிநொச்சி பொலிஸாரிடம் இளைஞரை ஒப்படைத்துள்ளனர். (ஒ-113)

## கொடுப்பனவு

யாழ்.மாவட்ட பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் சகாய நிதியத்தின் கீழ் இயற்கை மரணங்களுக்கான கொடுப்பனவுகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

அதன்படி இந்த நிதியத்தின் கீழ் இரண்டு சங்கங்களில் பணியாற்றிய இருவர் இயற்கை மரணமடைந்த நிலையில் அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்கிவைக்கப்பட்டது என்று சமாசம் தெரிவித்தது. (ச-17)

## மஹோற்சவ ஏற்பாட்டுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், இதுதொடர்பான முன்னேற்பாட்டுக் கூட்டம் சண்டிலிப்பாய் பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன் கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெறும் எனப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ப)

## மரக்கறிகள் மலிந்தன

யாழ்.குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலை கடந்த இரண்டு நாள்களில் பெருமளவில் சரிந்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

திருநெல்வேலி சந்தையில், கத்தரிக்காய் கிலோ 150 ரூபாவாகவும், தக்காளி கிலோ 200 ரூபாவாகவும், பயிற்றங்காய் கிலோ 180 ரூபாவாகவும் பாகல்காய் கிலோ 300 ரூபாவாகவும் பூசணிக்காய் கிலோ 180 ரூபாவாகவும் மரவள்ளிக் கிழங்கு கிலோ 100 ரூபாவாகவும் கரட் கிலோ 500 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-17)

# புலனாய்வாளர் தொடுத்த வழக்கு மார்ச் 28க்கு தவணையிடப்பட்டது

முல்லைத்தீவு, மார்ச் 4

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவரும் முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளருமான சண்முகம் தவசீலனுக்கு எதிரான வழக்கு மார்ச் மாதம் 28ஆம் திகதி விளக்கத்துக்காகத் தவணையிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கோத்தாபய கடற்படை முகாமின் கடற்படைப் புலனாய்வு அதிகாரி ஒருவர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைக்காக அழைக்கப்பட்ட தவசீலன், 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்தார். பின்னர் நீதிமன்றத்தால் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு கடந்த நான்கு வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்று வருகின்றபோதிலும் முறைப்பாட்டாளரான கடற்படைப் புலனாய்வதிகாரி நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு வருகைதருவதைத் தவிர்த்து வந்தார். இதையடுத்து கடற்படைப் புலனாய்வதிகாரியையும் அவரது சாட்சியையும் நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில், இந்த வழக்கு கடந்த 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் சார்பாக சட்டத்தரணி வி.எஸ்.எஸ்.தனஞ்சயன் முன்னிலையாகியிருந்தார். குறித்த கடற்படைப் புலனாய்வாளரும் வருகைதந்திருந்தார். ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் வழக்கு விளக்கத்துக்காக மார்ச் மாதம் 28ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது. (ம-19)

# சண்டிலிப்பாய் இந்து மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 4

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் வி.நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.இளம்பிறையன் கலந்துகொள்ளவுள்ளார். (ச)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால்சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். தந்தையுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும். வியாபாரம் வழக்கம்போல் இருக்கும்.

**மிதுனம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் கனிவான அணுகுமுறை அவசியம்.

**கடகம்:** நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். வியாபாரத்தில் சகவியாபாரிகளின் போட்டிகளை முறியடித்து விற்பனையைப் பெருக்குவீர்கள்.

**கன்னி:** தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளுக்காகச் செலவு செய்யநேரிடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். தாயாரின் உடல் நலனில் கவனம் தேவை. பிணக்குகள் நீங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே கருத்தொற்றுமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார். கடன்கள் விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிந்தித்துச் செயற்படவும். சிவபெருமானை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சாந்தனுக்கான அஞ்சலி எது?


ராஜீவ்காந்தி கொலைவழக்கில் கைதாகி, ஆயுள்சிறையை அனுபவித்து நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட பின்னரும் -அகதிகளுக்கான சிறப்பு முகாமில் உரிமைகள் மறுக்கப்பட்டு, பல துன்பங்களைச் சந்தித்து, இந்தியாவால் திட்டமிட்ட வகையில் சாகடிக் கப்பட்ட சாந்தனுக்காக தமிழர் தாயகம் நேற்றைய நாளை துக்கநாளாகக் கடைப்பிடித்திருக்கின்றது. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை சாந்தனின் புகழுடல் வரும்வழியெல்லாம் அஞ்சலிகள் - வணக்க நிகழ்வுகள் என்று அவருடன் உயிராகவும் உடலாகவும் ஒன்றித்திருந்தது தமிழர் தாயகம். இந்த உணர்வெழுச் சியான அஞ்சலிப்புகளைத் தொடர்ந்து, சாந்தனின் புகழுடல் இன்று எம்மை விட்டுப் பிரிகின்றது. ஆனால், நேற்றைய நாளில் சாந்தனுக்காக தமிழர் தாயகம் முன்னெடுத்த அஞ்சலிப்புகளையும், வணக்க நிகழ்வு களையும்தான் தமிழர் தாயகத்திடமிருந்து சாந்தன் எதிர் பார்க்கின்றாரா? அல்லது சாந்தனுக்கான உண்மை யான அஞ்சலிப்பென்பது எது? என்ற பொதுப் புரிதலை தாயகத்தினராகிய நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நான்கல்ல, ஐந்தல்ல கிட்டத்தட்ட 32 ஆண்டுகள் தொடர்ச்சியான சிறைவாசத்தின் பின்னர்தான் சாந்தன் இவ்வுலகைவிட்டுப் பிரிந்தார். 2009 ஆம் ஆண்டு புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்படும் வரையில், சாந்தனின் விடுதலையென்பது தூதரக ரீதி யாகக்கூட சாத்தியமற்ற விடயமாகவே இருந்தது. ஆனால், அதன் பின்னராவது சாந்தனினதும், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதான ஏனைய இலங்கை யர்களான றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் மற்றும் முருகன் ஆகியோரினதும் விடுதலைக்காக தாயகம் வலிதான குரல்கொடுக்கத் தவறியிருந்தது என்பதே கசப்பான உண்மை. உச்சக்கட்ட அபத்தமாக 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அவர்கள் இந்திய உச்சநீதிமன் றத்தின் தற்றுணிவின் அடிப்படையில் விடுவிக்கப்பட்ட பின்னராவது, சாந்தன் உள்ளிட்ட நால்வரையும் தாயகத்துக்கு அழைத்துவருவதற்கு அல்லது அவர்கள் செல்லவிரும்பும் நாடுகளுக்கு அனுப்பிவைப்பதற்குத் திராணியற்றதாகவே எம் தமிழ் அரசியல் தலைவர் களின் செயற்பாடுகளும், அவர்களின் அரசியலும் அமைந்திருந்தன. ஆனால், அரசியல் தலைவர்களை நோக்கி விரல் நீட்டிவிட்டு விலகிவிடும் விடயம் இதுவல்ல. இந்த விடயத்தில் ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரும் தம் கடமையை வினைத்திறனு டன் ஆற்றவில்லை. அந்தச் சிறைப்பறவைகளின் சிறகு கள் விரிக்கப்படுவதற்கான பதிலுதவிகளைச் செய்ய வில்லை என்பதே உண்மை.

சாந்தனினதும் அவர் தாயாரினதும் 32 ஆண்டுகாலப் பாசப்போராட்டம் முடிந்தகதை ஆகிவிட்டது. ஆனால், அதற்குக் கொஞ்சமும் குறையாத வலிகளுடன் இன்னும் மூவருடைய வாழ்வு எஞ்சியிருக்கின்றது. றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் மற்றும் முருகன் ஆகியோரின் குடும்பங்களும் திக்கற்று திசையற்றுத்தான் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவர்களை விடுவித்து, அந்தக் குடும்பங்களையாவது ஒன்றிணைக்க வேண்டிய, வாழ்வின் எஞ்சிய நாள்களையாவது ஒன்றாகச் செலவிடக்கூடிய வாய்ப்பை வழங்க வேண்டிய பெரும்பொறுப்பு தாயகத்தினருக்குத் தற் போதுண்டு. தன்னைக் கைவிட்ட தமிழினம் குறைந்த பட்சம் தன் நண்பர்களின் விடுதலையையாவது சாத்தி யப்படுத்துமா? என்பதைத்தான் சாந்தனின் ஆன்மா இப்போது எதிர்பார்க்கின்றது. அதை முற்றுமுழுதாக நிறைவேற்றுவதுதான் சாந்தனுக்கான உண்மை அஞ்சலிப்பாகவும் அமையும்.

அதைவிடுத்து கறுப்பு ஆடைகள் அணிவதும், கறுப்புக் கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்கவிடுவதும் மட்டுமே அஞ்சலிப்புகள் என்றாகாது...!






# ஏற்றுமதி வருமானம் இவ்வாண்டு வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 4

**இந்த ஆண்டின் முதலிரு மாதங்களில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று மத்திய வங்கி தெரி வித்துள்ளது.**

கடந்த ஆண்டில் பொருள்களை ஏற்றுமதி செய்யும்போது எதிர்பார்த்த வருமானம் குறைந்துள்ளது. சில பொருள்களை இறக்கு மதி செய்யும்போது அதன் உத்தேச செலவை விடவும் அதிக தொகை செலவிடப்பட்டுள்ளது. விவசாய மற்றும் ஆடை ஏற்றுமதி மூலம் கிடைக்கபெற்ற வருமானம் 0.8 வீதம் வீழ்ச்சி யடைந்துள்ளது. இந்த ஆண்டின் முதல் இரு மாதங்களில் ஏற்றுமதி வருமானம் 971 மில் லியன் அமெரிக்க டொலராகும். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டின் முதல் இரு மாதங்களில் ஏற்றுமதி வருமானம் ஒப்பீட்டள வில் வீழ்ச்சியைக் கண்டுள்ளது என்றும் மத் திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (ச-இ)



## உள்நாட்டு வேலைகள் திறன்மிக்கதாக மாறும்

மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 4

அடுத்த 10 ஆண்டுகளில், உள்நாட்டு வேலைகளையும் அதிதிறன் கொண்ட, அதிக ஊதியம் பெறும் வேலைகளாக மாற்றப்படும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். அரசமைப்புச் சட்டத்தின் படி, பாலின அடிப்படையில் யாருடைய நடமாட்டம், வேலை வாய்ப்பு என்பவற்றைக் கட்டுப்படுத்தமுடியாது. அடுத்த 10 ஆண்டுகளில் உள்நாட்டுச் சேவை வேலைகள் அதிக திறன் கொண்ட, அதிக ஊதியம் பெறும் வேலைகளாக மாற்றப்ப டும். என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## கடல் பாதுகாப்பில் இலங்கை கடற்படை

கொழும்பு, மார்ச் 4

சர்வதேசக் கடற்பரப்பில் கடல்சார் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவ டிக்கைக்கு இலங்கை தனது இரண்டாவது கப்பலை அனுப்பவுள்ளது என்று கடற்படை பேச்சாளர் தெரி வித்துள்ளார்.

முதலாவது கப்பல் தனது நடவடிக்கையைப் பூர்த்தி செய்த பின்னர் இரண்டு நாள்களுக்கு முன்னர் இலங்கைக்குத் திரும்பியுள் ளது என்றும் தெரிவித்துள் ளார். (எ-இ)

## சுற்றுலா வருமானம் 710 மில்லியன் டொலர்

2024 ஆம் ஆண்டின் முதல் 2 மாதங்களில் சுற் றுலா வருமானம் சுமார் 710 மில்லியன் டொலர் கிடைக்கப்பெற்றுள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர் னாண்டோ தெரிவித்துள் ளார். 2024 பெப்ரவரியில் இலங்கைக்கு 2 லட்சத்து 18 ஆயிரத்து 350 சுற்று லாப் பயணிகள் வந்துள்ள னர். கடந்த ஆண்டுடன் ஒப் பிடுகையில் 100 வீதம் அதிகமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## மத்திய வங்கி ஊழியர் சம்பளம் குழப்பத்தில் நாடாளுமன்றம்

மத்திய வங்கி தனது ஊழியர் களுக்கு மேற்கொண்டுள்ள பெருமளவிலான சம்பள உயர்வை இரத்துச் செய்வதற் குச் சாத்தியம் உள்ளதா என்ற குழப்பத்தில் நாடாளுமன்றம் உள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள் ளது. மத்திய வங்கி அண்மை யில் தனது ஊழியர்களின் சம்பளத்தை 29.53 வீதத்தில் இருந்து 79.97 வீதமாக திருத்திய மைத்துள்ளது. பெரி யளவிலான இந்தச் சம்பள அதிகரிப்புகள் தொடர்பில் பர வலான விமர்சனங்களைத் தொடர்ந்து, இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் தெளிவுப டுத்தப்படும் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (எ-இ)

**நாளை**

05.03.2024

**செவ்வாய்க்கிழமை**

**மாசி–22**

சுபநேரம் : 10.55 - 12.25

ராகுகாலம் : 03.25 - 04.55

**நாளொரு நல்வார்த்தை**

அதிகம் சாதிக்க, நீங்கள் முதலில் எல்லாவற்றையும் இழக்க நேரிடும்.

–சேகுவேரா –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பெண் பொலிஸ்; வடக்கில் பற்றாக்குறை

## ஐ. நா. சனத்தொகை நிதியத்திடம் ஆளுநர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 4

பாலின சமத்துவத்தின் அடிப்படையிலான விசாரணைப் பிரிவை மேம்படுத்தும் வகையில் தமிழ்ப் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான ஆளணிப் பற்றாக்குறை வடக்கு மாகாணத்தில் நிலவுகின்றது என்று வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் பியோ ஸ்மித்துடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் பெண்களுக்கான தொழில் சட்டங்கள் போதுமானதாக இல்லை எனத் தெரிவித்த ஆளுநர், நிறுவனமயப்படுத்தப்பட்ட பாதுகாப்பு பெண்களுக்கு இல்லை என்றும் கூறினார்.

பெண்கள், இளைஞர்கள் மற்றும் சமூகங்கள் மீது கவனம் செலுத்தி பாலியல் மற்றும் குடும்பத்திட்ட ஆரோக்கியம், பெண்களுக்கான உரிமைகள் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளைத் தடுப்பது உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து துறைசார் நிபுணர்கள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் கலந்துரையாடும் நோக்கில் பணிப்பாளர் பியோ ஸ்மித் இலங்கை வந்திருந்தார். அதன் ஒரு கட்டமாகவே வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து பெண்களின் நிலை குறித்துக் கலந்துரையாடினார். (ச-26)

# புதிய பேருந்து நிலையச்சேவை; 5 பேர் அடங்கிய குழு நியமிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

**யாழ்ப்பாணம்புதியபேருந்துநிலையத்திலிருந்துதூரப்பிரதேசங்களுக்கு போக்குவரத்துச் சேவையை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்வதற்கு, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் பணிப்புரைக்கு அமைய, வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன தலைமையில் ஐவரடங்கிய குழு அண்மையில் நியமிக்கப்பட்டது.**

யாழ்ப்பாணத்திலிருந்து தூரப் பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்களின் கோரிக்கையின் பிரகாரம் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில், பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து உரிய தீர்வுகளை வழங்குவதற்கு குழு நியமிக்கப்படும் என ஆளுநர் அறிவித்தார்.

இதற்கமைய நியமிக்கப்பட்டுள்ள ஐவரடங்கிய குழுவின் ஊடாக யாழ்ப்பாணம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து, இலங்கைப் போக்குவரத்துச்சபை மற்றும் தனியார் பஸ்களை இணைந்த நேர அட்டவணைக்கு அமைய தூர சேவைகளில் எவ்வாறு ஈடுபடுத்தமுடியும் என்பது குறித்து ஆராயப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளை ஒரு வாரத்துக்குள் ஆளுநருக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ஒ-27)



# சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ். மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவால் நடத்தப்பட்ட, பாடசாலை மாணவர்களுக்கிடையிலான முயற்சியாண்மை ஊக்குவிப்புச் செயற்றிட்டத்தில் பங்குபற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் தி.தனஞ்சயன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும், மாவட்ட மேலதிக செயலர் மருதலிங்கம் பிரதீபன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (ப-66)

# இரட்டிப்பாக்கிக் காட்டப்படும் மின்சார உற்பத்திச் செலவு



கொழும்பு, மார்ச் 4

உற்பத்திச்செலவுகளைக் கூடுதலாகக் காட்டி பில்லியன் கணக்காக மின்சாரசபை இலாபம் ஈட்டியுள்ளது என்று நாடாளுமன்ற நிலையியல் குழுக்களின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான காமினி வலேபொட தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான மின்சார உற்பத்திச் செலவு 140 பில்லியன் என மின்சாரசபை தெரிவித்துள்ளது. ஆனால் அவர்களின் அறிக்கைகளைப் பார்வையிட்ட போது 80 பில்லியன் ரூபா மேலதிகமாகக் காட்டப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பல சந்தர்ப்பங்களில் இரட்டைக் கணிப்பீடு நடைபெற்றுள்ளது. உரிய முறையில் உற்பத்திச்செலவு கணக்கிடப்படவில்லை.

2023 ஆம் ஆண்டில் 50 பில்லியனை இலாபமாகப்பெற்ற மின்சாரசபை, இந்த ஆண்டின் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் 15 பில்லியனை இலாபமாகப் பெற்றுள்ளது.

அதேவேளை மின்கட்டண அதிகரிப்பால் மாணவர்களின் கல்வி, விவசாயத்துறை, உற்பத்தித்துறை என்பன பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-6)

காரைநகர் தனியார் பேருந்து சங்க எல்லைக்குள்

# வழித்தட அனுமதி விற்பனை பஸ் உரிமையாளர்கள் எதிர்ப்பு

காரைநகர் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் அங்கத்தவரல்லாத ஒருவருக்கு வழித்தடம் விற்பனை செய்யப்பட்ட விவகாரத்தில் உரிய தீர்வு வழங்கப்படாவிடின் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படும் என அந்தச் சங்கம் அறிவித்துள்ளது.

1982ஆம் ஆண்டிலிருந்து காரைநகர் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் இயங்கி வருகின்றது. சங்கத்தின் உறுப்பினராக இருந்த பேருந்து உரிமையாளர் தனது பேருந்தின் வழித்தட அனுமதியை தனது உறவினர் அல்லாத - எமது சங்க உறுப்பினர் அல்லாத ஒருவருக்கு விற்பனை செய்துள்ளார்.

எமது சங்கத்தின் பரிந்துரையுடன், யாழ். மாவட்ட கூட்டிணைக்கப்பட்ட தனியார் பேருந்து கம்பனிகளின் சங்கத்துக்கு அனுப்பி, அவர்களின் மேலதிக பரிந்துரையுடன் இறுதி முடிவு எடுப்பதற்கு எங்களிடம் ஒப்படைக்கப்படும்.

பேருந்து மற்றும் அதனுடன் இணைந்த வழித்தடத்தை விற்பனை செய்யமுடியாது. மாறாக எமது சங்கத் தொழிலாளர்களே அதைக் கொள்வனவு செய்து சேவையை முன்னெடுத்து வந்தனர். இது மரபுரீதியான ஒரு முறைமையாகும். ஆனால் தற்போது அது மீறப்பட்டுள்ளது. சங்கத்தில் உறுப்பினர் இல்லாத ஒருவரை எம்மோடு கலந்துரையாடாது அவருக்கென தனியான நேர அட்டவணை மற்றும் நேரக் கண்காணிப்பாளரை கடமையில் ஈடுபடுத்தி சேவையை முன்னெடுக்கவுள்ளதாக, யாழ். மாவட்ட பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தனியார் பேருந்து நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். இதனை ஏற்கமுடியாது.

இந்த விடயம் தொடர்பில் கடந்த நவம்பர் மாதமே வீதிப் பயணிகள் போக்குவரத்துச்சபையின் வடமாகாண அதிகாரிக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியும் எதுவித சாதக நிலைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்று சங்கத்தினர் குறிப்பிட்டனர்.

இது தொடர்பில், யாழ். மாவட்ட வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தனியார் பேருந்து சாலையின் பொறுப்பதிகாரியைக் கேட்டபோது, பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையே வழித்தட அனுமதியை வழங்குகின்றது. அதன் பின்னர் வழித்தட உரிமையாளர்கள் இணைந்து சங்கமாகின்றார்கள். இந்நிலையில் தமக்குத் தெரியாது ஒருவர் பேருந்து விற்பனை செய்தால், பேருந்தை பயணிக்க விடமுடியாது என அவர்கள் சொல்லமுடியாது. ஐந்து நாள்களினுள் பேருந்து சேவை இயக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

அவ்வாறு பேருந்து சேவை முன்னெடுக்கப்பட்டால் தாம் புறக்கணிப்பை முன்னெடுப்போம் என்று ஏனைய பேருந்து உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-125)



# இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 4

ஞானச்சுடர் சஞ்சிகையின் மாசிமாத 314 ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியர் துரை கணேசமூர்த்தி விருந்தினராகக் கலந்து கொண்டார். (ப-66)

# பனையில் இருந்து தவறி வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

பனை மரத்திலிருந்து தவறி வீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ் .போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை பளை இந்திராபுரத்தில் இடம்பெற்றுள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையளிப்பு



மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்துக்கு பழைய மாணவர் சண்முகநாதன் பிரதீபனால் ஸ்கானர் இயந் திரம் கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டது. (ப-9)



## கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் இடைவினைக் கழகம் மற்றும் சுன்னாகம் றோட்டரிக் கழகம் என்பன இணைந்து, டிறிபேக் கல்லூரியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மாவட்டக் கிளையின் நிதியனுசரணையுடன் கடந்த புதன்கிழமை கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தன. (ப-125)




அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியில் தரம் -10,11 இல் நீருயிரின வளத் தொழில்நுட்பவியல் பாடம் கற்கும் மாணவர்களிடையே நடத்தப்பட்ட கடற்புல் தொடர்பான அறிவுக் களஞ்சியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. அதிபர் கு.பாலமுருகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பிராந்திய பொறியியலாளர் எந்திரி ஜீ. தர்ஷன், 'Clean Ocean Force' அமைப்பின் வடமாகாண பிரதிநிதி ம.சசிகரன், வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்ப பாட ஆசிரிய ஆலோசகர் ப.அருந்தவம், நாடகமும் அரங்கியலும் பாட ஆசிரிய ஆலோசகர் விஜயநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-27)

கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சி, பாடசாலையில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்டது.

நிகழ்வில் மாணவர்கள், பாடசாலை அதிபர், இலங்கை செஞ்சிலுவைச் சங்க வடக்குப் பிரிவுத் தலைவர் மற்றும் யாழ்.கிளை வளவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப)





தென்மராட்சிப் பிரதேச செயலக சிறுவர், பெண்கள் பிரிவால் முன்னெடுக்கப்பட்ட உள சமூக மேம்பாட்டுக்கான செயற்பாட்டு நிகழ்வு, வேல்ட் விசன் நிறுவனத்தின் நிதியனுசரணையுடன் மாவட்ட நன்னடத்தை உத்தியோகத்தர் தலைமையில் கைதடி சிறுவர் இல்லத்தில் அண்மையில் நடைபெற்றது. (ப-9)

யாழ்ப்பாணம் செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில், கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான ஊக்கப்படுத்தல் மற்றும் வழிகாட்டல் பயிற்சிப் பட்டறை கிளாரட் சிறுவர் கதம்பம் அமையத்தின் ஊடாக 'வாழ்வு என் கையில்' எனும் தொனிப்பொருளில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ப-125)



நொச்சிக்குளம் முத்துமாரியம்மன் வித்தியாலய மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வு பாடசாலை அதிபர் பாக்கியநாதன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் அதிதிகளாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் இ.மோர்சிபவன் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஜீவன், ஓய்வு நிலை அதிபர்கள், அயற் பாடசாலை அதிபர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-75)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறநெறிக்கல்வியை ஊக்குவிக்குமாறு பேரணி



வவுனியா, மார்ச் 4

மாணவர்களிடையே அறநெறிக் கல்வியை ஊக்குவிக்க வாய்ப்பளிக்குமாறு வலியுறுத்தி சிங்கள மக்களாலும், ஆசிரியர்களாலும் வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா தொல்பொருள் திணைக்களத்துக்கு முன்பாக அண்மையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தனியார் வகுப்புகள் இடம்பெறுவதால் அறநெறிக்கல்வியை பயில்வதற்கு மாணவர்களால் வருகைதர முடியாதுள்ளது.

இதனால் சிறுபிள்ளைகள் உரிய வழிகாட்டல்கள் இன்றித் தவறான வழியில் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

எனவே ஞாயிற்றுகிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களை நிறுத்தி அன்றையதினம் அறநெறிக்கல்வியைப் போதிப்பதற்கு வழி ஏற்படுத்த வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள். (ம-110)

## மருத்துவ முகாம்

மன்னார், மார்ச் 4

நானாட்டான் முச்சக்கரவண்டிகள் சங்கத்தினரின் ஏற்பாட்டில் நானாட்டான் மீள்எழுச்சிக் கட்டடத்தில் மருத்துவ முகாம் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

மருத்துவமுகாம் மருத்துவர் ஆர்.என். ரணவக்க, மருத்துவர் ஏ.ஜே.எமில் ரோய் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நானாட்டான் பிரதேச மருத்துவமனை தாதிய உத்தியோகத்தர்கள், முச்சக்கரவண்டிச் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-213)






சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கு, தேசிய மாணவர் படையணியின் யாழ்ப்பாணம் 20 ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் றொஹான் திஸாநாயக்க அமையம் மற்றும் பரமானந்த சமூக சேவைகளின் அனுசரணையில் கொட்டஹேன சிறி பரமானந்த புராண விகாராதிபதி தம்பலிட்ட விமலவன்ஸ தேரர் தலைமையில் 8 இலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. (ப)



விளையாட்டுத்துறை முன்னாள் அமைச்சர் ரொ ஷான் ரணசிங்க மற்றும் பதில் சுகாதார அமைச்சர் சன்ன ஜெயசுமண ஆகியோர் நயினாதீவு ரஜமஹா விகாரைக்கு கடந்த திங்கட்கிழமை விஜயமொன்றை மேற்கொண்டதுடன் அங்கு இடம்பெற்ற சிறப்பு வழிபாட்டிலும் கலந்து கொண்டனர். (ம-66)

## கண்காட்சியும் விற்பனையும்



உள்ளூர் உற்பத்திகளின் கண்காட்சியும் விற்பனையும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கி ழமை இடம்பெற்றது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவும் விதாதாவள நிலையமும் இணைந்து இந்த நிகழ்வை நடத்தின. இதன்போது ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன. நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-500)



## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

சுன்னாகம் றோட்டரிக் கழகமும் வேலணை மத்திய கல்லூரியின் இடைவினைக் கழகமும் இணைந்து பொருண்மியம் நலிவுற்ற 25 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை குறித்த பாடசாலையில் வைத்து கடந்த வியாழக்கிழமை வழங்கி வைத்தன. (ப-125)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் கமலராணி பரமசாமி

கடந்த 05.02.2024 திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் கமலராணி பரமசாமி அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (04.03.2024) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (06.03.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். உங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே அழைப்பு விடுக்க இயலாமைக்கு எங்கள் பணிவான மன்னிப்பைக்கோரி இதனை அவரவர்க்குரிய தனிப்பட்டதாகக் கருதி ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

A9 வீதி, மீசாலை மேற்கு
மீசாலை

குடும்பத்தினர்
077 660 7512

(CR/42042) J-1

### வாடகைக்கு

யாழ். ஸ்ரான்லி வீதியில்
03 கடைகளும், வீடும்
வாடகைக்கு உண்டு.

077 723 2535

### விற்பனைக்கு

யாழ்.பிறவுண் வீதியில் 03 பரப்புக் காணியும், யாழ்.
கே.கே.எஸ் வீதி பிரப்பங்குளம் வீதியில், இல.43 வீடும்,
காணியும் விற்பனைக்கு உண்டு.

077 723 2535

### வாடகைத்தாய் தேவை

நல்ல ஆரோக்கியமான
வாடகைத்தாய் தேவை.
தங்களின் விபரம்
இரகசியமாக வைக்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு

தொடர்பு:- 074 004 7586

(CS/54189) J-1

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள PPT எனும் நிறுவனத்திற்கு பஸ் நடத்துநரும், முறிகண்டியில் இயங்கி வரும் கிளைக்கு வேலையாட்களும் தேவை.

தொடர்பு: 077 386 6250


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 03 . 1940



இறப்பு 03 . 03 . 2024

### திருமதி இராசலட்சுமி சண்முகநாதன்

வட்டுக்கோட்டை அட்சின்சன் வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி சண்முகநாதன் (03.02.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. நவவரத்தினராசா - வள்ளியாட்சி அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. முத்துவேலு - நீலாயதாட்சிஅம்மா அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திரு. முத்துவேலு சண்முகநாதன் (மீசை தவம்) அவர்களின் அன்பு மனைவியும், கணேசகுமார், சரவணபவன், கௌரி, பவாணி, ஸ்ரீபரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சயந்தி, ஜெயபவன், சிவநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சூரியா, சுவேத்தா, பிரசன்னா, அட்சனா, பிரீத்தி, சிவகரன், மதுசன், திலக்சன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நகுலாம்பிகை, ஞானாம்பிகை, கனகாம்பிகை, கமலாம்பிகை, இரத்தினாத்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், நாகேந்திரம், நவரத்தினம், அருணாச்சலம் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.03.2024) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு இறுதிக்கிரியைகளுடன் கொத்துத்துறை மயானத்தில் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் முன்னிலையில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு:**

(பிரான்ஸ்) கணேசகுமார் - 003 375 8809950
(கனடா) சரவணபவன் - 164 740 90358
(ரு.மு) கௌரி - 441 784 7471816
(ரு.மு) பவானி - 441 738 5291913
(வட்டுக்கோட்டை) ஸ்ரீபரன் - 947 622 33096

**அட்சிசன் வீதி**
**வட்டுக்கோட்டை**

(CR/42044) J-1

## மரண அறிவித்தல்

மலர்வு 25 . 09 . 1947



உதிர்வு 01 . 03 . 2024

### தேவரத்தினம் மனுவேற்பிள்ளை

**(முன்னாள் ஆசிரியர்- திருகோணமலை புனித மரியாள் கல்லூரி, முன்னாள் உப அதிபர்- இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம், இளைப்பாறிய ஆசிரியர்- யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்)**

யாழ். இளவாலையைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட தேவரத்தினம் மனுவேற்பிள்ளை கடந்த 01-03-2024 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை - றோசம்மா தம்பதிகளின் பாசமிகு ஏக புதல்வியும், காலம்சென்றவர்களான சூசைப்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும், இராசம்மா அவர்களின் பெறாமகளும், ஞானரத்தினம் (ஒலிவர்- ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்ற மேரி அக்னஸ் (கிளி- லண்டன்), காலஞ்சென்ற அன்ரனி லீயோ போல் (பொன்னு- நேதர்லாந்து), மேரி திரேசா (சாந்தி) ஆகியோரின் மைத்துனியும், நியூட்டன், ஆனந்தராசா, அருள்நேசன், அன்ரனிராஜன், ராஜினி ஆகியோரின் சகோதரியும், ஜெஸ்லின், சுபராஜ், சியாமளின், ஜொஹான், சன்சியா, டாசியா, கனிசியா, கௌதமன், கௌசிகா ஆகியோரின் பெரியம்மாவும், ஜூடிற், ஜெனி, ஆஞ்சலோ, சிந்துஜா, ஜதுசன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05-03-2024) செவ்வாய்க்கிழமை அன்று சுண்டுக்குளி இல்லத்தில் (76/1A, கண்டி வீதி, யாழ்ப்பாணம்) மாலை 5.00 மணிவரை பார்வைக்காக வைக்கப்படும். நல்லடக்க ஆராதனை (06-03-2024) புதன்கிழமை இளவாலை இல்லத்தில் (பிரதான வீதி, இளவாலை) நடைபெற்று, பிற்பகல் 3:00 மணியளவில் புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**கலாநிதி அ. அன்ரனிராஜன் - 070 676 7878**
(தலைவர், புவியியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
**ஞானரத்தினம் - 076 675 8005**
(ஒலிவர்- ஓய்வுநிலை ஆசிரியர்)

(CS/54224) J-1

# 20 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கணபதி வேலுப்பிள்ளை



யாழ்ப்பாணம், தென்மராட்சி, வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அமரர் கணபதி வேலுப்பிள்ளை அவர்களின் 20வது ஆண்டு நினைவஞ்சலி.

நீங்காத னவுகள் தந்து நீண்டதூரம் சென்று ஆண்டுகள் இருபது க ாலும் ஓயவில்லை உங்கள் நினைவுகள் அகலவில் உங்களின் அன்பு முகம் அப்பா!

புன்னகை முகம் கொண்டு
ாதுத் தொண்டும், நேர்மையும் மிக்கவராக
தன்வாழ்வுதனில் சுயநலம் கருதாது
தரணியில் நாம் உயர
எமையெல்லாம் வளர்த்து விட்ட
எம் அன்புத் தெய்வமே!
எங்களுக்கு பெருமை சேர்த்த எம் அப்பாவே
உங்களின் சிறப்பினால் நாம் எல்லோரும்
பெருமை அடைந்தோம்!
இன்று நீங்கள் எம்மோடு இல்லை ஆனாலும்
நீங்கள் காட்டிய பாதையில் தான் நாம்
பயணிக்கிறோம் அப்பா !
மண்ணோடு மறையும் காலம் வரை எம் நெஞ்சோடு
இருக்கும் உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திகின்றோம்....!

தோற்றம் 27.06.1949 — மறைவு 04.03.2004

(CR/42067) J-1

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாந்தனின் திருவுடலுக்கு கிளிநொச்சியில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும், தீருவிலில் வைத்து நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவனும் நேற்று அஞ்சலி செலுத்தினர். (ஒ-113)

சனியிரவும் அத்துமீறிய

## இந்திய மீனவர்களால் சுழிபுரத்தில் பல லட்சம் ரூபா வலைகள் சேதம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

இந்திய இழுவைமடிப் படகுகளால் சுழிபுரம், சவுக்கடி கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த இரண்டு மீனவர்களின் வலைகள் அறுத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன. அத்துடன் வல்கைளை மீட்கமுயன்ற இரண்டு மீனவர்களின் கையில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு கடற்றொழிலுக்குச் சென்ற நீலவண்ணன் மற்றும் வசந்தன் ஆகிய இரண்டு மீன்வர்களின் படகுகளின் அருகே வருகை தந்த இந்திய இழுவைமடிப் படகுகள் அவர்களின் வலைகளை சேதப்படுத்திச் சென்றுள்ளன.

இதன் காரணமாக 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தலா இரண்டு வலைகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இழுவைமடிப் படகுகளை கண்டவுடன் தமது வலைகளை படகுக்குள் இழுக்க முயன்ற வேளை இரண்டு மீனவர்களின் விரல்கள் வெட்டுக் காயங்களுக்கும் உள்ளாகின. (அ-ஒ-125)



யாழ்ப்பாண மீனவர்களின் போராட்டம்

## இராமநாதபுரம் மீனவருக்கு மீன்பிடி அனுமதி இரத்து

யாழ்ப்பாணம், மார்ச் 4

எல்லைதாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய இழுவை மடிப் படகுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். மாவட்ட மீனவர்கள் வடக்கு கடலில் கறுப்புக் கொடிப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்திருந்த நிலையில் இராமநாதபுரம் மாவட்டம் மீனவர்களுக்கு மீன்பிடி அனுமதிச்சீட்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நலன் கருதி தமிழ்நாடு - இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் மற்றும் மண்டபம் தெற்கு மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு நேற்றைய தினம் மீன்பிடி அனுமதிச்சீட்டு இரத்து செய்யப்பட்டது.

இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் தமிழக மீன்பிடிப் படகுகளை சிறைபிடித்துச் செல்ல யாழ்ப்பாண மீனவர்கள் திட்டமிட்டிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இராமநாதபுரம் மாவட்டம் மீன்வளத்துறை அதிகாரிகள் பாதுகாப்பு நலன் கருதி நேற்று ஒருநாள் மண்டபம் மற்றும் பாம்பன் தெற்கு மீன்பிடி துறைமுகங்களில் இருந்து மீன்பிடிக்கச் செல்லும் விசைப்படகுகளுக்கு மீன்பிடி அனுமதிச்சீட்டை இரத்து செய்துள்ளனர். மேலும்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமநாதபுரம் மாவட்டம் மீனவர்களை உடனடியாகக் கரை திரும்ப அறிவுறுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-100)

## அவசரசிகிச்சைப் பிரிவில் சிவாஜிலிங்கம் சேர்ப்பு

சென்னை, மார்ச் 4

தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டதை அடுத்து சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ஒ-100)

## வடக்கு - தமிழக மீனவர் முறுகல்: சாகல இந்தியாவுக்கு பயணமாகிறார்



கொழும்பு, மார்ச் 4

இலங்கை - இந்திய மீனவர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள முறுகலைத் தணிக்கும் நோக்குடன் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்கா இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

இந்திய அரசாங்கமும் சாகலவின் பயணத்தை வரவேற்றுள்ளதுடன் நீண்ட காலமாக நீடித்து வரும் இந்தப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளது. (அ-ஒ-6)

சட்டவிரோதமான

## பணத்தை மீளப்பெறும் சட்டவரைவு அடுத்தமாதம்

கொழும்பு, மார்ச் 4

சட்டவிரோதமாகப்பெற்ற பணத்தை மீளப்பெறும் சட்டவரைபு சர்வதேச நாணய நிதியத்தின் அனுசரணையுடன் அடுத்த மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இலஞ்சமாகப் பெற்ற பணத்தை, அதைக் கொடுத்தவரிடம் திருப்பிக் கையளிக்கும் பொறிமுறை இந்தச் சட்டவரைவில் உள்வாங்கப்படவுள்ளது. (அ-ஒ-6)


## 22ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் : 20.12.1935 மறைவு : 07.03.2022

அமரர் சின்னத்தம்பி பாலசுந்தரம்

வையகம் போற்ற வாழ்ந்து
வானுறையும் தெய்வமதாய் இயற்கையில் இணைந்து
பழுதில்லாப் புதுமலராய் - என்றும் எம் இதயங்களில் மணம் வீசும்
அன்பு நிறை அப்பாவே!
ஆண்டுகள் இருபத்து இரண்டு ஆனதே பிரிந்து
உயர் குணமேவிய திருவுருவாய் வழிகாட்டி
நிலவொளியாய் குளிர்மை தந்து
தினம் எமையெல்லாம் மனதாற்றி
நல்வழி காட்டிய உம் கருணையினை
அகவொளியாய் நிறைமதியாய் குறைநிறைகள் எடுத்தியம்பி
பேறாகப் பெற்றோம் பெருமை கொண்டோம் !
நீறாகிப் போனாலும் நீங்களே திசைகாட்டி
நித்திய வாழ்வினில் நீங்கா நிறையுரு...
அணையாது ஒருபோதும் நாம் கொண்ட பாசம்...
தேயாமல் வளருமிது தெய்வீக பாசம்..!
இயற்கையின் அசைவுகளில் உம்
உணர்வுகளை நுகர்ந்து
உம் பாதம் மலர் தூவி வணங்குகிறோம்!

சங்கம் வீதி
சங்கத்தானை
சாவகச்சேரி

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி சிறப்பு முகாமில் சாந்தனுக்கு அஞ்சலி!

இந்திய - இலங்கை கூட்டுச் சதியால் சாகடிக்கப்பட்ட சாந்தனுக்கு திருச்சி சிறப்பு முகாமில் சக சிறைத் தோழர்கள் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.
சாந்தனின் திருவுருவப் படத்துக்கு ரோஜாப்பூ மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.
இதன்போது ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலையாகி திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முருகன் உள்ளிட்டோரும் சாந்தனுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்கள். (அ-ஒ-100)

## இந்தியாவுக்கு...

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-
வல்வெட்டித்துறைக்கென்று தனிப்பெருமையுண்டு. தீருவிலுக்கு அதனை விட தனித்துப் பெருமை உண்டு. இந்திய - இலங்கை கூட்டுச்சதியால் படுகொலை செய்யப்பட்ட குமரப்பா - புலேந்திரன் உள்ளிட்ட 12 போராளிகளதும் பின்னராக தளபதி கிட்டு உள்ளிட்ட சக பத்துப் போராளிகளதும் நினைவுகளைத் தாங்கி நிற்கின்ற மண் இது.
அக்காலப்பகுதிகளில் அவர்கள் ஞாபகார்த்த நினைவுத் தூபிகளை நிர்மாணித்த கட்டட ஆச்சாரி தில்லையம்பலம். அவருக்கு நாள் தோறும் சோறு எடுத்து வந்திருந்தவர் அவரது மகன் சுதேந்திரராஜா. ஆம், அந்த தில்லையம்பலத்தின் மகனான சுதேந்திரராஜா - சாந்தனாக 34 வருடங்களின் பின் அதே தீருவில் வந்திருக்கின்றார்.
அதே இந்திய - இலங்கை அரசுகளது கூட்டுச் சதியால் காவு கொள்ளப்பட்ட சாந்தனின் திருவுடல் அவன் நேசித்த மண்ணுக்கு வந்திருக்கின்றது. அவன் நேசித்த மக்களது கண்ணீரிடையே, மக்கள் திரண்டு அஞ்சலித்த நிலையில் தீருவிலுக்கு வந்துள்ளது. அவனது 34 வருடநீதிகோரியவிடுதலைப்பயணத்தில் துரோகங்களையே இழைத்த தமிழக ஆட்சியாளர்களைத் தாண்டி குரல் கொடுத்துப் போராடிய தொப்புள் கொடி உறவுகளின் சார்பில் இங்கு வருகை தந்துள்ள அண்ணன் சட்டத்தரணி புகழேந்தியை நன்றியுடன் வரவேற்கின்றோம். தொப்புள் கொடி உறவுகளை மீண்டுமொரு முறை நன்றியுடன் கட்டித் தழுவிக்கொள்கின்றோம்.
இன்னமும் நீதி கிடைக்காமல் போராடிக்கொண்டிருக்கின்ற அண்ணன்கள் முருகன் உள்ளிட்ட மூவரது சார்பிலும் வந்துள்ள முருகனின் தாயார் மற்றும் சகோதரர்களையும் அரவணைத்துக் கொள்கின்றோம். சாந்தனின் சாவுக்காக நீதி கோரும் பயணத்திடையே, தொடர்ந்தும் இலங்கை ஆட்சியாளர்களை நம்பி ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றோம். இதனைத் தமிழ் மக்களாகிய நாம் மீள மீள இந்திய அரசுக்கு எச்சரித்துக்கொண்டேயிருக்கிறோம். ஆனாலும் இந்திய ஆட்சியாளர்கள் அதனைச் செவிமடுக்காது 'செவிடன் காதில் ஊதிய சங்கு போல' மௌனித்திருக்கின்றனர். ஆனால் நாம் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம். ஆனால் 'இலவு காத்த கிளிகள் போல' காத்திருக்கின்ற எமது அரசியல்வாதிகள் போலவல்ல என்பதை இந்திய ஆட்சியாளர்களுக்கு புரியும்படி சொல்லிவைக்க இச்சந்தர்ப்பத்தில் விரும்புகின்றோம்.
இந்திய ஆட்சியாளர்கள் நினைப்பது போலவல்ல ஈழத்தமிழர்களது மனோநிலை. தொப்புள் கொடி உறவுகளுக்காக நிலைத்திருக்கின்ற நேசம், ஒரு காலத்தில் இந்திய வல்லாதிக்கத்துக்கான நேசமாக இல்லாது மாறி தொப்புள் கொடி உறவுகளுடன் மட்டுமாக தனித்துப் போகலாம். நீடித்து வருகின்ற அரசியல் சூழல் அதனைக் காண்பித்து நிற்கின்றது. இந்தியப்பாணியிலான நிவாரணங்கள் 30 வருடத்துக்கு மேலாக விடுதலைக்காகப் போராடிய எமது மக்களை நிச்சயம் சாந்திப்படுத்தப்போவதில்லையென்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.
தமிழ் மக்களுக்கான - அவர்களால்ஏற்றுக் கொள்ளத்தக்கதான - அரசியல் தீர்வை இந்தியாவால் பெற்றுத்தர முடியுமென்ற நம்பிக்கை இன்னமும் சிறிதேனும் எஞ்சியிருந்தது. அதைக்கூட அண்ணன் சாந்தனின் சிறைச் சாவு பொய்ப்பித்துள்ளது. இன்றையநாளில்மீண்டுமொருமுறை இந்திய அரசிடம் எமது நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.
எஞ்சிய மூன்று அரசியல் கைதிகளும் தாயகம் திரும்ப உடன் அனுமதிக்கப்படவேண்டும். சிறப்பு முகாம்கள் மூடப்பட்டு அனைவரும் வெளியில் அனுமதிக்கப்படவேண்டும். தமிழ் மக்களுக்கான நிரந்தரமானதும், தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான அரசியல் தீர்வுக்கு உதவவேண்டும். முள்ளிவாய்க்கால் இன அழிப்புக்கான நீதிகோரிய தமிழ் மக்களது விடுதலைப் பயணத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். 13ஆவது திருத்தம் போன்ற செத்துப்போன அரசியல் தீர்வை தமிழ்மக்களது தலைகளில்கட்டியடிக்கின்ற 30வருடத்துக்கு முந்திய உத்திகளைக் கைவிடவேண்டும் என்பவையே அவையாகும் - என்றுள்ளது. (அ-ஒ-26)

## அம்மாவின்...

நிறைவேறாது சாந்தன் உயிரிழந்து வித்துடலாக தாயைப் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளமை மிகுந்த வேதனையளிக்கிறது எனத் தமிழ்நாட்டைச் சேர்ந்த சட்டத்தரணி புகழேந்தி வல்வெட்டித்துறையில் நேற்றுத் தெரிவித்தார்.
இந்திய - இலங்கை கூட்டுச்சதியால் கொல்லப்பட்ட சாந்தனின் திருவுடல் வல்வெட்டித்துறை, தீருவில் சதுக்கத்துக்கு நேற்றுக் கொண்டுவரப்பட்டது. தீருவில் சதுக்கத்தில் வைக்கப்பட்ட சாந்தனின் திருவுடலுக்கு பொதுமக்கள், பொது அமைப்புகள், பாதிக்கப்பட்ட தரப்பினர், அரசியல் கட்சியினர் எனப் பெருமளவானோர் நேரில் கலந்துகொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.
இதன்போது சிறப்புமுகாமில் தடுத்துவைத்திருக்கும் சாந்தன் உள்ளிட்டோரது வழக்கு விடயங்களை முன்னெடுத்து வரும் சட்டத்தரணி புகழேந்தி அஞ்சலி உரை நிகழ்த்தியபோது இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்த நிலையில் இந்தியாவின் பல்வேறு சிறைக்கூடங்களைக் கடந்த சாந்தனினால் திருச்சி சிறப்பு முகாமில் ஒரு வருட காலத்தைக்கூட கடக்கமுடியாமல் போயிருந்தது.
சாந்தனை எப்படியும் காப்பாற்றிவிடலாம் என நம்பியிருந்தோம். இலங்கை திரும்புவதற்கான அனுமதியை பெப்ரவரி 27ஆம் திகதி பெற்றுக்கொண்டு அந்த மகிழ்ச்சியான நிலையில் சென்னை அரசு மருத்துவமனைக்கு சென்றபோது அந்தத்தகவலைத் தெரிந்துகொள்ள முடியாத நிலையில் அவரது உடல்நிலை மோசமான நிலையை எட்டியிருந்தது.
தன்னுடைய அம்மாவின் கையால் ஒரு பிடி சாப்பாட்டைச் சாப்பிட்டால் எல்லா வருத்தமும் மாறிவிடும் என்று சொல்லிக் கொண்டிருப்பார். அதுதான் அவருடைய கடைசி ஆசையாகவும் இருந்தது. அந்த ஆசைகூட நிறைவேறாது சாந்தன் உயிரிழந்து வித்துடலாகத் தாயைப் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளமை மிகுந்த வேதனையளிக்கிறது - என்றார். (அ-ஒ-100)

## உணர்வெழுச்சியுடன்...

நின்று மக்கள் தமது உணர்வுபூர்வமான இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

**வவுனியா**

வவுனியாவில் முன்னாள் போராளிகள் நலன்புரிச்சங்கத்தின் அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 7.30 மணியளவில் திருவுடல் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் ஊர்வலமாக வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்குள் எடுத்துச்செல்லப்பட்டது. அங்கு மக்கள் அணி திரண்டு அஞ்சலி செலுத்தினர். அங்கிருந்து மாங்குளத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி சேவை சந்தை முன்பாக அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்கள், பிரமுகர்கள் எனப் பலரும் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர். தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், திருவுடலுக்கு சிவப்பு மஞ்சள் கொடி போர்த்தி அஞ்சலித்தார்.

**கொடிகாமம்**

தென்மராட்சி வாழ் சமூக மையத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரன் தலைமையில் சாந்தனின் அஞ்சலி நிகழ்வுகள் கொடிகாமம் பேருந்துத் தரிப்பிடத்தில் முன்னெடுக்கப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி க.சுகாஷ் ஆகியோர் அங்கு அஞ்சலி செலுத்தினர். பொதுமக்களும் பெருமளவில் பங்கேற்று அஞ்சலித்தனர். ஐந்து மாவீரர்களின் சகோதரனும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான சி.சிவநேசன் ஈகச்சுடரை ஏற்றி வைத்தார்.
தொடர்ந்து நெல்லியடியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கிருந்து பிரதான அஞ்சலி செலுத்தும் இடமான வல்வெட்டித்துறை தீருவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு பெருமளவு மக்கள் கலந்துகொண்டு அஞ்சலித்தனர். பின்னர் இரவு 7 மணிக்கு உடுப்பிட்டியிலுள்ள அவ ரது வீட்டுக்கு திருவுடல் கொண்டு செல்லப்பட்டது. (அ-ஒ-18-26-110-113-159)

## சாந்தனின்...

நிலவியது. வவுனியா பழைய பேருந்து நிலையத்தினுள் சாந்தனின் திருவுடலுடன் ஊர்தி உள்நுழைந்தது. அங்கு கடமையில் இருந்த பொலிஸார் ஊர்தி அருகே சென்று ஊர்தியை இவ்விடத்தில் தரித்து நிறுத்தமுடியாது. அவ்வாறு தரித்து நிறுத்தினால் சாரதியைக் கைது செய்வோம் எனக் கூறினர். சாரதியையும் வாகனத்தை விட்டு கீழே இறங்குமாறு தெரிவித்தனர். இதனால் அவ்விடத்தில் பதற்றமான சூழ்நிலைமை நிலவியது.
அதன் பின்னர் ஏற்பாட்டுக் குழுவினர் பழைய பேருந்து நிலையத்திலுள்ள வாகனத் தரிப்பிடத்தில் ஊர்தியைத் தரித்து நிறுத்தி அஞ்சலி நிகழ்வை மேற்கொண்டனர். (அ-ஒ-110)

## கடலில்...

பலாலிப் பகுதி மீனவர்கள் கறுப்புக் கொடி கட்டி இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.
காங்கேசன்துறை, மயிலிட்டி, ஊறணி பகுதி மீனவர்கள் இந்திய எல்லை வரை சென்று தமது கறுப்புக் கொடிப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர். 100க்கும் அதிகமான மீன்பிடிப் படகுகளில் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.
இது தொடர்பில் மீனவர்கள் கடலில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், இந்திய மீன்பிடிப் படகுகள் நாளாந்தம் இலங்கை கடற்பரப்புக்குள் வந்து எங்களுடைய கடல்வளத்தை அழித்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் இந்தியாவின் மத்திய மற்றும் மாநில அரசுகளால் அவர்களுடைய மீனவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றதா என்று கேட்கின்றோம்.
உங்கள் கடலில் மீன்பிடியுங்கள். எங்களை அழிக்க நினைக்காதீர்கள். அதேபோல் கடற்படையினரிடம் நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம். எல்லைதாண்டும் இந்தியமீனவர்களைக் கட்டுப்படுத்த உங்களால் முடியாது என்றால், எங்களிடம் விட்டுவிடுங்கள். நாங்கள் பார்த்துக் கொள்ளுகின்றோம். இந்திய இழுவைமடிகளை நாங்கள் கடலில் வைத்து தீ மூட்டி விடுவோம் - என்றனர். (அ-ஒ-23-66-100-125)

## ஆராத்தியுடன்...

கூறியமை அங்கிருந்த அனைவருக்கும் கண்ணீரை வரவழைத்தது.
திருவுடல் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது சாந்தனின் தாயார் கதறி அழுதார்.
'ஓம் நமசிவாய' நாமம் ஒலிக்க, இன்று இறுதிக்கிரியைகள் நடக்கும் வரை தாய் மடியில் சாந்தன் மீளாத்துயில் கொள்கின்றார். (அ-ஒ-26-100)

பகுதிநேர வேலையாள்கள் தேவை

வெல்டர் வேலைக்கு பகுதிநேர பணியாளர்கள் தேவை.
விரும்பினால் இரவிலும் பணியாற்றலாம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 077 120 9998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் பெண் காயம்

தாவடிச் சந்தியில் நேற்று மாலை 5 மணியளவில் இடம் பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளும் முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளாகின. இதிலேயே குறித்த பெண் காயமடைந்துள்ளார்.
(அ-ஒ-27)

**வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்**

DHL
சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தியிலிருந்து கோப்பாய் செல்லும் பிரதான வீதி முகப்புடன் நான்கு (04) நிலப்பரப்புக் காணிவிற்பனைக்கு உண்டு. சகல ஆவணங்களுடன். சிவப்பு மண், நன்னீர் ஊற்று, கிருஷ்ணர் கோவில் அருகாமை, தரகர் தேவையில்லை.
(CS 28078) S-1
தொடர்பு:
**077 638 5683, 075 638 5684**

## காணி விற்பனைக்கு

பளை முகாவிலில் காணி விற்பனைக்கு உண்டு. புளியடிச் சந்தியில் இருந்து 300m தொலைவில் பயன்தரு தென்னை மரங்கள் அருகில் அமையப்பெற்ற சூழலில் 12 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. பளை ரவுணில் இருந்து மிக அருகில் அமைந்துள்ளது. இன்றே தொடர்பு கொள்ளவும்.
**076 830 0414, 077 858 3022**

## வாடகைக்கு

கல்வியங்காடு மூன்றாம் கட்டையில் உள்ள கடையும் கடைக்கு மேல் தளத்தில் உள்ள வீடும் வாடகைக்குண்டு.
**077 1750746**

## Vacancies

Office Clerk, Accountant, Account Assistant, Office Admin, Instructor ICT, Accounts clerk, Data Entry, Cashier, Program Coordinator, Counter Staff, Sales Manager, Assistant Manager, Field Manager, Regional Sales Manager.
**076 098 4532, 077 773 3368**

## வேலையாட்கள் தேவை

தெல்லிப்பளையில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு சமையல் ஆட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தெல்லிப்பளை பிரதேசத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
**077 841 7811, 077 662 2078**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 . 09 . 1948

மறைவு
14 . 02 . 2023



## கனகரத்தினம் இராசமணி

இன்று (04.03.2024) திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் வீட்டில் நடைபெறும். முதலாம் ஆண்டு திதி கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உதிரத்தை பாலாக்கி ஊட்டினாய் அம்மா
உலகத்தின் உயரத்தில் எமை இருத்தினாய் அம்மா
உயர்வோடு நாம் வாழ உனை உருக்கினாய் அம்மா
உனை உள்ளத்தில் இருத்தி உன் நினைவுகளுடன்
என்றும் நாம்.....

கண்ணுக்கு ஒளியாய், நெஞ்சத்தில் நினைவாய்
நிலையாய் என்றும் எங்களோடு
எங்களின் இறைவனாய்-என்றும்
எங்களை வழி நடத்த வணங்குகிறோம்

அம்மாவின் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs28090) (N.1)

**Tharany SUPERMARKET**

தமிழ், சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு உங்கள்

# தாரணி சூப்பர்மார்க்கெட்டின் மாபெரும் பரிசு மழை



## 04.03 2024 முதல் 31.03.2024 வரை

**1 வது பரிசு**
ஒவ்வொன்றும் ரூபா 10.000 பெறுமதியான 5 சாறிகள்

**2 வது பரிசு**
ஒவ்வொன்றும் ரூபா 10.000 பெறுமதியான 3 சாறிகள்

**3 வது பரிசு**
ஒவ்வொன்றும் ரூபா 10.000 பெறுமதியான 2 சாறிகள்

ஒவ்வொரு ரூபா 2,500 பெறுமதியான பொருள் கொள்வனவிற்கும் ஒரு வெற்றி வாய்ப்பு.
அதிக அதிகமாக உங்கள் வீட்டிற்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்து வெற்றி வாய்ப்புக்களை அதிகரித்துக்கொள்ளுங்கள்
(01.04.2024 அன்று) வெற்றியாளர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்

எமது வி[illegible] விலைச் சலுகைகளை நாள்தோறும் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தின் ஊடாக தெரிந்துகொள்ளலாம்
facebook.com/tharanysupermarket

பின்வரும் பொதிகளில் ஒன்றை ஓடர் செய்து டெலிவரி மூலம் பெற்றுக்கொள்வதன் ஊடாகவும் இப் பரிசுமழையில் நனையும் சந்தர்ப்பத்தை பெற முடியும்.

**அத்தியாவசிய பொதி**
1. அங்கர் 400 g-1
2. சீனி 2 kg
3. கோதுமை மா 3 kg
4. சன்லைட் பவுடர் 1.2 kg
4. சந்தூர் சோப் - 1

**வயோதிபர்களுக்கான பொதிகள்**
1. புரோட்டிநெக்ஸ் 180 g-1
2. நெஸ்டமோல்ட் 450 g-1
3. அன்லீன் 400 g-1
4. கிறீம் கிறெக்கர் 490 g-1

**குழந்தைகளுக்கான பொதி**
1. ஓடிக்கலோன் -1
2. பேபி சோப் -1
3. இயர்பட் -1
4. கோல்டன் கௌ பிஸ்கட் -1
5. பேபி வைப்ஸ் -1
6. பேபி பௌடர் -1

| | | | |
|---|---|---|---|
| Rs.259.00 வெள்ளைச் சீனி Max 2Kg | Rs.183.00 கோதுமை மா Max 3Kg | Rs.429.00 மஞ்சள் பருப்பு | Rs.899.00 No.1 செத்தல் மிளகாய் |
| Rs.1025.00 ~~1090~~ Max 1 Lakspray Milk Powder | Rs.299.00 ரவை | Rs.59.00 ~~80~~ Anchor Yoghurt | Rs.1799.00 ~~2000~~ Protinex |
| Rs.389.00 ~~425~~ Vim Liquid | Rs.2589.00 ~~3000~~ Vitagen Vanilla | Rs.399.00 ~~430~~ Sunlight Powder Rose | Rs.1129.00 ~~1190~~ Anchor Plus |
| Rs.139.00 ~~175~~ Santoor Soap | Rs.439.00 ~~480~~ Chick Shampoo | Rs.2999.00 ~~3250~~ Diabeta Plus | Rs.479.00 ~~550~~ Ocean Star Mackerel |

Delivery Charge Will Be Rs. 300 All Over the Jaffna District

T.P.: 077 1997 206
No.758, KKS Road, Jaffna.

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org